Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50
பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 112

சனிக்கிழமை 18 மார்ச் 2023 | பங்குனி 04 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



“உதெல்லாம் மானம் ரோசம் இருக்கிற அரசாங்கத்திட்ட எல்லோ கேக்கவேணும். ரணிலுக்குத்தான் அப்பிடி ஒண்டுமில்லையே”

## 94 கிராம் கொக்கெய்ன் பருத்தித்துறையில் மீட்பு!

### உலகின் அதி அபாயகரமான போதை

யாழ்ப்பாணம், மார்ச் 18
உலகின் அதி அபாயகரமான போதைப் பொருள் என்று கருதப்படும் 94 கிராம் கொக்கெய்ன் போதைப் பொருள் பருத்தித்துறையில் நேற்று மீட்கப்பட்டுள்ளது.
கடற்படை புலனாய்வுப் பிரிவின ருக்குக் கிடைத்த தகவல் »11

## போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 18
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருநெல்வேலி பகுதியில் 100 போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவரை கோப்பாய் பொலிஸார் நேற்று மாலை கைதுசெய்துள்ளனர். »11

### புற்றுநோயால் பாதிக்கப்பட்ட

## 6 வயதுச் சிறுவன் பரிதாபமாகச் சாவு!

### மதத்தை நம்பியதால் சிகிச்சைக்கு மறுப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18
குருதிப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 6 வயதுச் சிறுவன் ஒருவன், உரிய மருத்துவச் சிகிச்சைகள் வழங்கப்படாததை அடுத்து பரிதாபமாக உயிரிழந்தான். இந்தச் சம்பவம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது. »11

# நிதியை வழங்கினால் தேர்தலுக்குத் தயாரா?

## அரசாங்கத்திடம் பவ்ரல் கேள்வி

கொழும்பு, மார்ச் 18
உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு தடையாகவுள்ள நிதிநெருக்கடிக்கு தீர்வைக் காண்பதற்கு சில தரப்புக்கள் முன்வந்தால் அரசாங்கம் தேர்தலை நடத்தத் தயாரா? என பவ்ரல் அமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது. »11



## பண்ணை சுற்றுவட்டத்தில் திருவள்ளுவருக்குச் சிலை

யாழ்ப்பாணம், மார்ச் 18
யாழ். மாநகர முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணனின் 'தூய அழகிய மாநகரம்' எனும் துரித அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ், யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்துக்கு முன்பாகவுள்ள யாழ். பண்ணை சுற்றுவட்டத்தில் திரு »11

## 12 தமிழக மீனவர்கள் நேற்று விடுதலை!

யாழ்ப்பாணம், மார்ச் 18
அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைக்காக வடக்கு கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 12 தமிழக மீனவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர். »11

## அரசியல்கைதியொருவர் பொதுமன்னிப்பில் விடுதலை

கொழும்பு, மார்ச் 18
கடந்த 15 ஆண்டுகளாக அரசியல்கைதியாக சிறையிடப்பட்டிருந்த, விவேகானந்தனூர் சதீஸ் என்ற பெயரில் அறியப்படும் செல்லையா »11

### கீரிமலை

## ஆதிசிவன் ஆலயத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை

யாழ்ப்பாணம், மார்ச் 18
வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை ஆதிசிவன் ஆலயம் அமைந்துள்ள பகுதியில் எதிர்வரும் பங்குனி உத்தர தினத்தன்று (ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி) சிவலிங்கம் பிரதிஷ்டை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. »11

## மயங்கி வீழ்ந்த பெண் இறப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 18
மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது மயங்கி வீழ்ந்த தங்கராசா தவமணி (வயது-68) என்ற மூதாட்டி சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். »11

## சிமெந்துத் தொழிற்சாலையமைக்க பொன்னாவெளி சரியான பகுதியா?

### ஆய்வு செய்யுமாறு கோரிக்கை விடுத்து துணைவேந்தருக்கு சிறீதரன் எம்.பி. கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 18
கிளிநொச்சி மாவட்டம், பூநகரி பிரதேசத்துக்குட்பட்ட வேரவில் கிராமத்தில், சிமெந்துத் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அதன் சாதக, பாதகத் தன்மையை ஆய்வுக்கு உட்படுத்தக்கோரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தருக்கு நாடாளுமன்ற »11

## மதுவுக்கு அடிமையானவர் சிகிச்சை பயனின்றிப் பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 18
மதுபோதைக்கு அடிமையான 50 வயதுடைய நபரொருவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார். »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் தரம் பயிலும்

# 33 சதவீதமான மாணவர்கள் கைபேசிக்கு அடிமை

### கேட்கும் பேசும் திறனும் குறைவடைவு



**கொழும்பு, மார்ச் 18**

**கொரோனா வைரஸ் பரவலின்போது பாடசாலைகள் மூடப்பட்ட சந்தர்ப்பத்தில் 33 சதவீதமான முதலாம் தர மாணவர்கள் கைபேசி பாவனைக்கு அடிமையாகியுள்ளனர். அதனால் அவர்கள் கேட்கும் மற்றும் பேசும் திறன் விருத்தி குறைவாகப் பதிவாகியுள்ளது. கல்வி அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.**

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

கொரோனா வைரஸ் பரவலின் போது வீடுகளில் முடங்கியிருந்த முதலாம் தர மாணவர்களில் 33 சதவீதமானோர் கைபேசி பாவனைக்கு அடிமையாகியுள்ளனர். அதேநேரம் 7 சதவீதமானோர் 3 மணி நேரத்துக்கு அதிகமாக தொலைக்காட்சியைப் பார்ப்பதில் செலவிட்டுள்ளனர்.

கொரோனா காலத்தில் மாணவர்களின் கல்வித் தரம் கடுமையாகப் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மாணவர்களில் 90 சதவீதமானோர் போதிய கல்வியறிவு அல்லது எண்கள் பற்றிய அறிவைப் பெறவில்லை. அதன்படி, 73 சதவீதமானோருக்கு கேட்கும் திறன், 80 சதவீதமானோருக்கு பேசும் திறன் ஆகியவை குறைவடைந்துள்ளது.

மேலும் கற்றல் திறன் பெறாதவர்கள் 63 சதவீதமாகவும், எழுதும் திறன் இல்லாதவர்கள் 66 சதவீதமாகவும் உள்ளனர்.

மேலும் அந்தக் காலப்பகுதியில் படித்த புத்தகங்கள் மற்றும் கற்றல் தொடர்பான ஆய்வில் 19 சதவீதமானோர் எந்த விதமான புத்தகத்தையும் பயன்படுத்தவில்லை என்பது தெரியவந்துள்ளது - என்றுள்ளது. (ச-இ)

## சலுகை விலையில் சதொசவில் கொப்பிகள்

கொழும்பு, மார்ச் 18

பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான அப்பியாசப் புத்தகங்களை சலுகை விலையில் வழங்குவதற்கு சதொச நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று அதன் தலைவர் சவான் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அரச அச்சக கூட்டுத்தாபனத்தால் உற்பத்தி செய்யப்படும் உயர்தர அப்பியாசப் புத்தகங்கள் நாடு முழுவதும் உள்ள 48 லங்கா சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக விற்பனை செய்யப்படுகின்றன. அதற்கமைய பாடசாலை மாணவர்களுக்கு சதொச நிலையங்களில் இருந்து உயர்தர அப்பியாசப் புத்தகங்கள் வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-14,இ)

## ரயில் - கார் மோதி இருவர் உயிரிழப்பு

**கொழும்பு, மார்ச் 18**

**ரயிலுடன் கார் மோதி விபத்துக்குள்ளானதில் பெண் உள்ளிட்ட இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்து காலி - கொக்கலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நிகழ்ந்துள்ளது. விபத்தில் அஹங்கமையை சேர்ந்த இருவரே உயிரிழந்துள்ளனர்.**

கொக்கலையிலுள்ள ரயில் கடவையை கார் கடக்க முற்பட்ட வேளையே இந்த விபத்து சம்பவித்தது. ரயிலில் மோதிய கார் சுமார் 300 மீற்றருக்கு அப்பால் இழுத்துச்செல்லப்பட்டு விபத்து சம்பவித்துள்ளது. (ஒ-14,இ)

## வட்ஸப் ஊடாக மாணவிக்கு நிர்வாணப் புகைப்படங்கள்

### சந்தேகநபரான பிரதிஅதிபர் கைது!

கொழும்பு, மார்ச் 18

**தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கு வட்ஸப் செயலி ஊடாக நிர்வாணப் புகைப்படங்களை அனுப்பிய குற்றச்சாட்டில் சந்தேகத்தின் அடிப்படையில் பிரதிஅதிபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.**

கம்பஹா அத்தனகல்ல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் இந்தச்சம்பவம் பதிவாகியது என்று கம்பஹா பிரிவு சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் தெரிவித்துள்ளது.

மாணவியின் தாயார் தனது அலைபேசியில் நிர்வாணப் புகைப்படம் காணப்பட்டதை அவதானித்துள்ளார். அதன்பின்னர் இது குறித்து மகளிடம் (மாணவி) வினவியுள்ளார். அதன்போதே பிரதிஅதிபரால் புகைப்படம் அனுப்பப்பட்டது தெரியவந்தது. அதனையடுத்து மாணவியும் மாணவியின் தாயாரும் கம்பஹா பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்துக்குச் சென்று முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். முறைப்பாட்டையடுத்து பாடசாலையின் பிரதிஅதிபர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டார்.

விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், வட்ஸப் செயலி மூலம் மாணவிக்கு நிர்வாணப் புகைப்படங்கள் அனுப்புவது மட்டுமின்றி, பாடசாலை அலுவலகத்துக்கு மாணவி அழைக்கப்பட்டு பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டார் என்று மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். மேலதிக விசாரணைகளை கம்பஹா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14,இ)

## நீதிபதிகளின் ஊதியத்தில் வரி நீதிமன்று இடைக்காலத் தடை

கொழும்பு, மார்ச் 18

**நீதிபதிகளின் சம்பளத்துக்கு வரி விதிக்கும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாமல் தற்போதைய நிலையைப் பேணுமாறு இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்துள்ளது மேன்முறையீட்டு நீதி மன்றம்.**

அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் வருமானம் பெறுவோரிடம் வரி அறவீடு நடைமுறையை நீதிபதிகளின் ஊதியத்தில் நடைமுறைப்படுத்தாமல் இருக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

உயர்நீதிமன்ற நீதிபதிகள் சங்கம் மற்றும் நீதிச்சேவை அதிகாரிகளின் சங்கம் என்பன இணைந்து இந்த மனுவை சமர்ப்பித்தன.

இந்தநிலையில் ஐந்து நீதிபதிகள் கொண்ட குழு முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மனு வரும் 22 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படும் எனவும் அதுவரை நீதிபதிகளின் சம்பளத்திலிருந்து வரி அறவிடுவதற்கு இடைக்கால தடை விதிக்கப்படுகிறது எனவும் தீர்ப்பிடப்பட்டது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கை கால்பந்து அணிக்கு

## சர்வதேச தடைவிதிப்பு 197 நாடுகள் ஆதரவு!

கொழும்பு, மார்ச் 18

சர்வதேச கால்பந்துப் போட்டிகளில் விளையாட இலங்கைக்கு சர்வதேச கால்பந்து சம்மேளனமான 'பிபா' விதித்த தடை உத்தரவுக்கு 197 நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ளன.

ருவாண்டா தலைநகர் கிகாலியில் நடைபெற்ற உலக கால்பந்து சம்மேளனத்தின் பொதுச்சபையில் இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் 208 நாடுகள் கலந்து கொண்டன. அவற்றில் 197 நாடுகள் இலங்கைக்கு சர்வதேச கால்பந்து தடை விதிக்க ஆதரவாக வாக்களித்தன.

இலங்கை விளையாட்டு அமைச்சின் முறையற்ற செல்வாக்கு, விளையாட்டின் சுதந்திரத்தை மீறுதல், தன்னிச்சையான திணிப்பு, நியாயமான தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் பாதை வரைபடத்தை மீறுதல் உள்ளிட்டவற்றை கருத்திற்கொண்டு 197 நாடுகள் அந்த முடிவை எட்டியுள்ளன.

அதற்கமைய இலங்கை தேசிய அணி 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை இடம்பெறும் உலகக் கால்பந்து போட்டிகளில் பங்குபற்றமுடியாது. இந்த தடை மறு அறிவித்தல் வரையில் நடைமுறையில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## சிறைவாடும் நோய்வாய்ப்பட்ட கைதிகளுக்கு பொதுமன்னிப்பு

### *சட்டம் திருத்தியமைக்கப்படுகிறது நீதியமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 18



**சிறைப்படுத்தப்பட்டும் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் மனிதாபிமான அடிப்படையிலான ஒழுங்குவிதிகளை உள்வாங்கி சிறைச்சாலைகள் ஒழுங்கு விதிகள் சட்டத்தை முழுமையாக திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிறைச்சாலைகளில் நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டிருப்பவர்களை பொதுமன்னிப்பில் விடுதலை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது என நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்தார்.**

நீதியமைச்சில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வர்த்தமானி அறிவிப்பின் மூலம் நிறுவப்பட்ட நிறுவனம் ஒன்றினூடாகவே புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நிறுவனம் ஊடாக விடுதலைப்புலிகள் அமைப்பில் அங்கம் வகித்த 12 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்டவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டனர்.

போதைப்பொருளுக்கு அடிமையாகின்றவர்களை புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படுவது தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் எழுந்த நிலையில் புனர்வாழ்வளிக்கப்படுபவர்கள் நீதிமன்றத்தினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டும் என தெரிவிக்கப்பட்டது. அதற்கமைய புனர்வாழ்வளிக்க இந்த புனர்வாழ்வு பணியக சட்ட மூலம் அனுமதிக்கப்படுகிறது. அதன் பொறிமுறையை தற்போது தயாரித்து வருகிறோம்.

அதேபோன்று சிறைச்சாலைகள் ஒழுங்குவிதிகள் சட்டம் முழுமையாக திருத்தியமைக்கப்பட்டு, சிறைப்படுத்தப்படும் கைதிகளின் உரிமைகள் பாதுகாக்கப்படவுள்ளது. அதற்கு மனிதாபிமான அடிப்படையிலான ஒழுங்குவிதிகள் உள்வாங்கப்படவுள்ளன.

நீண்டகாலம் சிறைப்படுத்தப்பட்டிருப்பவர்கள்- குறிப்பாக வயது முதிர்ந்த நோயாளர்கள் தொடர்பில் சுகாதாரப் பணிப்பாளரால் நியமிக்கப்படும் விசேட மருத்துவ நிபுணர்கள் குழு முன்வைக்கும் பரிந்துரைக்கு அமைய அவர்களின் பெயர்களை ஜனாதிபதிக்கு சமர்ப்பித்து அவர்களை பொதுமன்னிப்பில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது - என்றார். (ச-இ)

# 13ஆவது திருத்தம் தமிழருக்குத் தீர்வல்ல

## அநுரகுமார தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 18**

**அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் ஊடாக தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்கமுடியாது. அனைவரும் ஏற்றுக்கொள்ளும் புதியதொரு அரசமைப்பின் ஊடாகவே அவர்கள் தீர்வைப் பெறமுடியும்.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வை எட்டுவேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வந்தார்.

பின்னர் நாட்டின் ஒற்றையாட்சியை பாதுகாத்துக்கொண்டு, அதிகாரப் பரவலாக்கத்தை வழங்குவதற்கு நாம் தயார் என இழுத்தடிப்புச் செய்கிறார்.

தற்போதைய அரசால் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வு வழங்கமுடியாது.

தற்போதுள்ள அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் ஊடாகவோ - அதில் அதிகாரத்தை கூட்டியோ அல்லது குறைத்தோ தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வை எட்டமுடியாது. தெற்கு மக்கள் நிராகரிக்கும் தீர்வு ஒருபோதும் தமிழர்களுக்கான தீர்வாக அமையாது.

அனைத்து இன மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய புதிய அரசமைப்பின் ஊடாகவே நிலையான - சரியான தீர்வைப் பெற முடியும் - என்றார். (ச-இ)



# அராலி மேற்கு பல்பொருள் நிலையத்துக்குத் தீ வைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி மேற்குப் பகுதியில் உள்ள பல்பொருள் நிலையம் ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு தீ வைக்கப்பட்டுள்ளது.

கடையின் உரிமையாளர் நேற்று வெள்ளிக்கிழமை காலை வழமைபோல விற்பனை நடவடிக்கைக்காக பல்பொருள் நிலையத்தை திறக்க முற்பட்டவேளை, தீ வைக்கப்பட்டு எரிந்து சேதமாகியிருந்தது அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-14)

# நாவற்குழி விகாரைக்கு சவேந்திரசில்வா வருகை

நாவற்குழியில் அமைந்துள்ள விகாரையில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள நிகழ்வொன்றுக்கு முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா வருகைதரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை காலை முதல் பிரித் ஓதுதல் மற்றும் விசேட பூசைகளுடன் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த நிகழ்வுக்கு தென்னிலங்கையில் இருந்து 128 பௌத்த பிக்குகளும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-14)

# வலி. கிழக்குப் பிரதேசசபை உறுப்பினர் மீது வாள்வெட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 18

வலி.கிழக்கு பிரதேசசபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் செல்வராசா மற்றும் அவரது மனைவி ஆகியோர் வாள்வெட்டுத்தாக்குதலில் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கோப்பாய் - மானிப்பாய் வீதியிலுள்ள அவரது வீட்டுக்கு முன்பாக நடந்துள்ளது.

பிரதேசசபை உறுப்பினரும் மனைவியும் ஆலயத் திருவிழாவில் கலந்துகொண்டு வீடு திரும்புகையில் பின்தொடர்ந்து வந்த மூவர் குழு மனைவி அணிந்திருந்த நகைகளை அறுக்க முற்பட்டுள்ளனர். அப்போது அதனைத் தடுக்க அவர்கள் முற்பட்டபோது அவர்கள் மீது வாளால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவ இடத்தில் திரண்ட மக்கள் இருவரையும் மீட்டு யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்த்தனர். சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச)

# பூநகரி - 4ஆம் கட்டையில் இளைஞரின் சடலம் மீட்பு!

கிளிநொச்சி, மார்ச் 18

பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 4 ஆம் கட்டைப் பகுதியிலுள்ள வீடொன்றில் வாயில் நுரை தள்ளிய நிலையில் இளைஞரின் சடலம் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை காலை மீட்கப்பட்டது என்று பூநகரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பூநகரி 4 ஆம் கட்டை பகுதியைச் சேர்ந்த பாலச்சந்திரன் இசைமாறன் (வயது-24) என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இளைஞர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு பிறந்தநாள் நிகழ்வுக்குச் சென்றுவிட்டு பின்னர் வீட்டுக்குச் சென்றார். நேற்றுக் காலை 6 மணியளவில் வீட்டிலுள்ளவர்கள் சென்று பார்த்தபோது வாயில் நுரை தள்ளிய நிலையில் காணப்பட்டார். அதனையடுத்து உறவினர்கள் இளைஞரை மீட்டு பூநகரி மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு இளைஞரை மருத்துவர்கள் சிகிச்சைக்குட்படுத்தியபோது ஏற்கனவே இளைஞர் உயிரிழந்துவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இளைஞரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (ஒ-14,113)

# மானிப்பாய் மருதடி விநாயகரின் கொடியேற்றம் எதிர்வரும் 22 இல்

யாழ்ப்பாணம், மார்ச் 18

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் மஹோற்சவம் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாவுள்ளது.

தொடர்ந்து 25 தினங்கள் இடம்பெறவுள்ள மஹோற்சவத்தில் ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு சப்பறத்திருவிழாவும், சித்திரைப் புத்தாண்டு தினமான 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் 15 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும், அன்றைய தினம் மாலை கொடியிறக்க உற்சவமும் இடம்பெறவுள்ளது என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஒ-14,66)

# பசுமை அமைதி விருது வழங்கும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 18

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுகள் வழங்கும் நிகழ்வு, யாழ்ப்பாணம் மத்தியகல்லூரிக்கு அருகிலுள்ள தந்தை செல்வா கலையரங்கத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட சூழல் பொது அறிவுப் பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர்கள் சூழலியல் ஆசான் க.சி. குகதாசன் ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதுகளும், 2022ஆம் ஆண்டின் சிறந்த சூழல்நேயச் செயற்பாட்டாளர் தால காவலர் மு.க.கனகராசா ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் 2022ஆம் ஆண்டில் மாணவர்களிடையே நடத்தப்பட்ட வீட்டுத்தோட்டப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு மாணாக்க உழவர் மதிப்பளிப்பும், இராசதானியத் திட்டத்தின் கீழ் சிறுதானியச் செய்கையைச் சிறப்பாக மேற்கொண்டவர்களுக்கு மாண்புறு உழவர் மதிப்பளிப்பும் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-14)

# புத்தூர் அலுவலகத்துக்கு 30 மில். நிதியில் பணிகள்

## வலி.கிழக்கு பிரதேசசபை ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், மார்ச் 18

வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தலைமைக் காரியாலய வளாகத்தில் புத்தூர் உப அலுவலகத்துக்கான நவீன பொது நூலகத்தையும் கேட்போர் கூடத்தையும் அமைப்பதற்கு சபை நிதியில் 30 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

வலி.கிழக்குப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் நடைபெற்றது. அதன்போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

எமது சபையின் இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் 6 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதுபோதாத நிலையில் கடந்தமாதம் முடிவுறுத்தப்பட்ட இறுதிக் கணக்குகளின் பிரகாரம் 30 மில்லியன் ரூபா எமக்குக் கிடைத்துள்ளது.

ஒதுக்கப்பட்டுள்ள இந்த நிதி வலிகாமம் பிரதேசமக்களின் பணத்தில் ... என்பதில் பெருமையடைகிறோம்.

நீண்டகாலமாக புத்தூர் உப அலுவலகத்துக்கு சிறந்த நூலகக் கட்டுமானத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு வந்த நிலையில் இந்தத் திட்டத்துக்கு 30 மில்லியன் ரூபா நிதி சபையால் விடுவிக்கப்பட்டுள்ளது. அதன்படி அலுவலகப் பணிகளைத் தடையின்றி மேற்கொள்வதற்கான அவைத்தீர்மானங்கள் உரியவகையில் எடுக்கப்பட்டுள்ள நிலையில் விரைவில் ... மக்கள் பயன்பாட்டுக்குக் கையளிப்போம் - என்றார். (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
23 • 05 • 1927

மறைவு
14 • 03 • 2023

## திருமதி திருநாவுக்கரசு யோகேஸ்வரி

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருநாவுக்கரசு யோகேஸ்வரி கடந்த (14.03.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த சீனிவாசகம் - பூரணம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த செல்லையா - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நேசம்மா, இராசம்மா, அழகம்மா, செல்லம்மா, அப்புத்துரை, ஞானம்மா, மனோரஞ்சிதம், புனிதவதி, வசந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரோஜா, யோகேஸ்வரன் (கனடா), விக்கினேஸ்வரி, சோதிமலர் (கனடா), சபேசன் (கனடா), சிவபாலன் (கனடா), கமலவேணி, சாந்தினி (கனடா), சத்தியேந்திரா ( கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கனகசபாபதி மற்றும் சிவகுமாரி, பாலகிருஷ்ணன், தமயந்தி, வசந்தகுமாரி, விஜயகுமார், ஜெகநாதன், குணநாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுதர்ஜன் - தரங்கினி, கலையரசி - சதீசன், தாட்ஷாயினி - கிஷோன் மாறன், நிவேதா - விஜய், சஜித்தா, வனஜா -சுதேஷ்வரன், சுகந்தி - தயாபரன், காலஞ்சென்ற சசிகலா, விமல்ராஜ் - குணசகிலா, கமல்ராஜ் - கிருபாஜினி, பிரதீபா - நிரஞ்சன், பிரதீசன் - விஷ்ணுகா, பிரேமிகா - கஜேந்திரன், திபேசன், நிந்துஜன், சஜீவன், ஆரணி, சுவேதா - அரூஷன், திவ்யா - பானுஜன், சரண்யா - சிவமைந்தன், நிலோஜன், துஷா, அனோஜா, ஆகாஷ், லக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், விஷ்ணுயா, அபிமன்யு, லக்ஷயா, சௌமியா, றீனா, சோபி, ஆரோன், ஜெதுஷன், பானுஜன், மிதுசன், ஓவியா, அபினயா, ரக்சிகன், நவீன், கவின், வைஷாலி, றிஷாலி, மதுசன், நிதுசன், அபிசன், சிவமித்திரன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.03.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வடக்கு இருளன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்துக் கல்லூரி வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

தகவல் :
குடும்பத்தினர்.
சந்திரன் (மருமகன்)

(CS/23921)4.6)

077 353 8626

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுடலை ஞானத்தால் பயனில்லை

உள்ளூராட்சித் தேர்தல் நகைப்புக்கிடமானதொன்றாகி விட்டது. தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு மீண்டும் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றது. ஆட்சியாளர்களின் குறிப்பாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் விருப்புக்கு மாறாக தேர்தல் நடத்தமுடியாது என்ற தவறான முன்னுதாரணம் ஒன்று காண்பிக்கப்படுகின்றது. இவற்றுக்கு மேலாக, உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பும்கூட உதாசீனப்படுத்தப்படுகின்றது. அதுமட்டுமல்லாது உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு, நாடாளுமன்ற சிறப்புரிமை என்ற போர்வைக்குள் நின்றுகொண்டு ஆளும் கட்சியினரால் அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டு வருகின்றது.

தேர்தலை நடத்துவதற்கான தீர்மானத்தை தேர்தல்கள் ஆணைக்குழு எடுத்திருந்தாலும் அதனை நடைமுறைப்படுத்த அரசாங்கத்தின் ஏனைய இயந்திரங்கள் ஒத்துழைப்பை வழங்கமறுக்கின்றன. இதனால்தான் தேர்தல் தொடர்பில் பல்வேறு வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. அதிலும் தேர்தலுக்காக நாடாளுமன்றம் ஒதுக்கிய நிதியை விடுவிப்பதை தடுக்க வேண்டாம் என்ற இடைக்காலக் கட்டளை நிதி அமைச்சுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. உயர்நீதிமன்றம் அவ்வாறானதொரு கட்டளையை வழங்கிய பின்னர் அதைக் கேலிக்கூத்தாக்கும் வகையில் நிதி அமைச்சரும், நிறைவேற்றதிகார ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க நடந்துகொள்கின்றார். நிதி தொடர்பில் நாடாளுமன்றமே முடிவெடுக்கமுடியும் என்றும் அதன் காரணமாக தேர்தல் தொடர்பில் நாடாளுமன்றமே எந்தத் தீர்மானத்தையும் எடுக்கலாம் என அவர் திரும்பத் திரும்பக்கூறி வருகின்றார். அதற்கு மேலதிகமாக ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக, நாடாளுமன்றத்தின் சிறப்புரிமையில் உயர்நீதிமன்றம் தலையிட்டுள்ளதாகத் தெரிவித்து சிறப்புரிமை பிரச்சினையையும் எழுப்ப வைத்து வருகின்றார் ரணில். இந்த நீதிமன்ற தீர்ப்பை புறக்கணித்து அதற்கு எதிராக செயற்படும் ஜனாதிபதி உட்பட ஆளும் கட்சிக்கு எதிராக எல்லா எதிர்க்கட்சிகளும் திரண்டுள்ளன. அதேபோன்று தென்னிலங்கையின் முற்போக்குவாதிகள் என்று சொல்லக்கூடிய சிவில் சமூகத்தினரும்திரண்டுள்ளனர், அது வரவேற்கப்படக்கூடியதுதான். இப்போது கூச்சலிடும் எல்லோரும் 1987ஆம் ஆண்டிலிருந்து கோமாவில் இருக்கின்றனரா? என்ற கேள்வியை எழுப்பாமலும் இருக்கமுடியவில்லை.

நாட்டின் மீயுயர் சட்டமாகக்கொள்ளப்படுகின்ற அரசமைப்பையே 1987 ஆம் ஆண்டிலிருந்து மீறிவருவது தொடர்பில் இவர்கள் கிஞ்சித்தும் அக்கறை கொள்ளவில்லை. 1987 ஆம் ஆண்டு இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாக உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் அதே ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அன்றுமுதல் இன்று வரை 13 ஆவது திருத்தத்தின் ஊடாக மாகாணசபைகளுக்கு பகிரப்பட்ட காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தாமலேயே கொழும்பில் ஆட்சிக்கு வரும் எவரும் இருந்து வருகின்றார்கள். இப்போது உயர்நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காது தேர்தலை நடத்த ஒத்துழைக்காத ஜனாதிபதியையும், ஆளும் தரப்பையும் சாடும் எவரும் எல்லாவற்றுக்கும் மேலான அரசமைப்பை மீறுவது தொடர்பில் ஏன் குரல்கொடுக்கவில்லை? ஆகக் குறைந்தது அது தொடர்பில் அக்கறைகாண்பிக்கவில்லை.

13 ஆவது திருத்தம் தமிழ் மக்களுக்கான தீர்வு அல்ல என்றபோதும், இந்த நாட்டில் தமிழ் மக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட அதிகாரப் பரவலாக்கம் அது ஒன்றுதான். தமிழ் மக்களுக்கானதென்பதால் அரசமைப்பை மீறும் ஆட்சியாளர்கள் தொடர்பில் எவரும் கேள்வி கேட்பதில்லை. தமிழ்மக்களுக்குஎதிரானமீறல்களுக்காகக் குரல் கொடுக்காது ஒதுங்கியிருந்ததன் விளைவுகளை சிங்கள தேசம் இப்போது ஒவ்வொன்றாக அனுபவிக்கின்றது. பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழ் மக்களுக்கு எதிராக இருந்தவரை அதுபற்றி அலட்டிக்கொள்ளாத சிங்களதேசம் இப்போதுதான் அதன் வலியை உணர்ந்திருக்கின்றது, இவையெல்லாம் சுடலை ஞானமே.

நாளொரு நல்வார்த்தை

"உலகில் அனைவருக்கும் சமமாகவும் இலவசமாகவும் கிடைக்கும் அபூர்வமான மூலதனம் காலம்"

– விவேகானந்தர்




# பொலிஸ்மா அதிபராகும் சர்ச்சைக்குரிய தேசபந்து?

**கொழும்பு, மார்ச் 18**

**மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்படவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுப் பாதுகாப்பு அமைச்சுக்கு இதனை அறிவித்தார் எனக் கூறப்படுகிறது.

இதுதொடர்பில் உத்தியோகபூர்வமற்ற விதத்தில் பொதுப்பாதுகாப்பு அமைச்சர் திரான் அலஸ் மற்றும் தேசபந்து தென்னக்கோன் ஆகியோருக்கு இதுகுறித்து தகவலளிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது.

இதேவேளை கடந்த ஆண்டு மே 9 இல் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல் விவகாரம் தொடர்பில் தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை முன்னெடுத்து அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# டொலர் பெறுமதி 200 ரூபாவாகும்

## ஜனாதிபதி நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 18


டொலரின் பெறுமதியை 200 ரூபாவாகக் கொண்டு வரும் வகையில் ஜனாதிபதி செயற்பட்டு வருகிறார் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

நாட்டைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்கு முறையான வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வருகிறார்.

தற்போது அந்நியச் செலாவணி அதிகரிக்கும் நிலையில் சர்வதேச நாணயநிதியத்தின் கடனுதவி கிடைக்கவுள்ளது.

இந்தநிலையில் உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்தி அரசாங்கக் கொடுப்பனவு பெறும் 8 ஆயிரம் பேரை நியமிப்பது இந்த நேரத்தில் சுமை என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.



அடுத்த வருட இறுதிக்குள் டொலரின் பெறுமதியை 200 ரூபாவாக ஜனாதிபதி கொண்டுவருவார். ஜனாதிபதியின் காலைவாராது ஆதரித்தால் பிரச்சினைகளை தீர்த்து நாட்டை அவர் கட்டியெழுப்புவார் - என்றார். (ச-இ)

நாளை

19.03.2023
ஞாயிற்றுக்கிழமை
பங்குனி 05

சுபநேரம் : 09.18 - 10.48
ராகுகாலம் : 04.48 - 06.18

பிரதோஷவிரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 18

பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பின் ஏற்பாட்டில் 'பெண்களை ஒடுக்கும் இன்றைய பொருளாதார முறைமைக்கு எதிராக எழுவோம்' எனும் தொனிப்பொருளில் மகளிர் தின நிகழ்வு கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவை மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இதன்போது சி.சிவசேகரத்தின் 'கல்லாகவே ஆனாள்' பெண் விடுதலைக் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது.

நிகழ்வின் தொடக்க உரையை வலி. கிழக்குப் பிரதேசசபை உறுப்பினர் ச. நித்திகா, கருத்துரைகளை யாழ்.பல்கலைக்கழக கல்லூரிப் பணிப்பளார் கலாநிதி விஜிதா பகீரதன், சட்டத்தரணி ஆதித்தன் கார்த்திகா, சமூகச் செயற்பாட்டாளர்களான சத்தியமலர் இவீந்திரன், வினுசன் ரேணுகா ஆகியோர்ஆற்றவுள்ளனர். (ஒ-14,66)

## மன்னார் கடற்பகுதியில் அனுமதியற்ற வகையில் கடலட்டை பிடித்தோர் கைது!

மன்னார் - சிலாவத்துறை மற்றும் வான்கலை கடற்பரப்புகளில் சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 814 கடலட்டைகள் மற்றும் 2 டிங்கி படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன எனக் கடற்படையினர் தெரிவித்தனர்.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை தடுப்பதற்காக கடற்படையினரால் கடந்தவாரம் தீவின் கரையோரப் பகுதிகளிலும் கடற்பரப்புகளிலும் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தச் சுற்றிவளைப்பின்போது சிலாவத்துறை கடற்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி கடலட்டை பிடித்த 3 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 580 கடல் வெள்ளரிகள் மற்றும் ஒரு டிங்கி படகு ஆகியவை கைப்பற்றப்பட்டன. வான்கலை கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையில் சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த ஐவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 234 கடலட்டைகள் மற்றும் கடலட்டை பிடிக்கப் பயன்படுத்திய ஒரு டிங்கி படகு ஆகியவை கைப்பற்றப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களும் சான்றுப்பொருள்களும் சட்ட நடவடிக்கைக் குட்படுத்த கல்பிட்டி மற்றும் மன்னார் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என கடற்படையினர் தெரிவித்தனர். (ச-213)

**மாபிள் வேலை**
உங்கள் வீடுகளுக்குத் தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 55 ரூபாய்
**077 334 1281** (22937)4.6

**விற்பனைக்குண்டு**
Electric மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
**077 423 7536**
**021 221 2539**

**Sales Driver தேவை**
அரிசி ஆலை ஒன்றுக்கு Sales Driver தேவை.
**076 096 9734**
**076 096 9735**

# INVITATION FOR BID (2023/02)
# Regional Directorate of Health Service Jaffna.

01. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Directorate of Health Services, Jaffna, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
02. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
03. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
04. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents and in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 1 Documents.
05. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.
06. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Regional Directorate of Health Services,No 572/3 Hospital Road Jaffna. (T.P:0212227889, Fax:0212220822) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table, upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment should be by cash.
07. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road, Jaffna on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
08. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, 572/3 Hospital Road, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.
09. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| CATEGORY I | Document Issuing/Purchasing Period | | | From 20.03.2023 until 02.04.2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 2.30 P.M on 27.03.2023 | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 03.04.2023 | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | |
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/04/41/2023/PSSP/W/15 | Repair and Renovation of SMO Office at Kurunagar,Jaffna. | 2.26 | 81Days | C9, C8 and C7 (Buildings) | 3,500.00 | 23,000.00 | Till 03.07.2023 |
| NP/04/41/2023/PSSP/W/16 | Repair and Renovation of Office Building at MOH Office Kayts,Jaffna. | 3.67 | 94Days | C9, C8 and C7 (Buildings) | 3,500.00 | 37,000.00 | Till 03.07.2023 |

| CATEGORY II | Document Issuing/Purchasing Period | | | From 20 .03.2023 until 02.04.2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 2.30 P.M on 27.03.2023 | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 03.04.2023 | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | |
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/04/41/2023/PSSP/W/17 | Construction of Security Hut Base Hospital Kayts. | 1.58 | 75Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 16,000.00 | Till 19.06.2023 |
| NP/04/41/2023/PSSP/W/18 | Construction of Security Hut Base Hospital Point Pedro | 1.58 | 75Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 16,000.00 | Till 19.06.2023 |
| NP/04/41/2023/PSSP/W/19 | Construction of Boundary wall and Gate at Base Hospital Point Pedro. | 1.56 | 75Day | C9 and C8 (Buildings) | 1,500.00 | 16,000.00 | Till 19.06.2023 |
| NP/04/41/2023/PSSP/W/20 | Repair and Renovation of NO Quarters at Base Hospital Katys,Jaffna. | 1.72 | 77Day | C9 and C8 (Buildings) | 1,500.00 | 17,500.00 | Till 19.06.2023 |
| NP/04/41/2023/PSSP/W/21 | Repair and Renovation of Wash room Ward No.02 at Base Hospital Kayts,Jaffna. | 1.44 | 74Day | C9 and C8 (Buildings) | 1,500.00 | 15,000.00 | Till 19.06.2023 |
| NP/04/41/2023/PSSP/W/22 | Improvement Work at Base Hospital Point Pedro,Jaffna.-Mortuary | 0.56 | 58Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 6,000.00 | Till 19.06.2023 |
| NP/04/41/2023/PSSP/W/23 | Repair and Renovation of Wash room ward No.03,04,05,06 at Base Hospital Chavakachcheri | 1.58 | 76Day | C9 and C8 (Buildings) | 1,500.00 | 16,000.00 | Till 19.06.2023 |
| NP/04/41/2023/PSSP/W/24 | Construction of Vehicle Park at Base Hospital Kayts,Jaffna. | 1.25 | 73Day | C9 and C8 (Buildings) | 1,500.00 | 13,000.00 | Till 19.06.2023 |
| NP/04/41/2023/PSSP/W/25 | Repair and Renovation of NO Quarters (Female ) at Base Hospital Katys,Jaffna | 1.45 | 74Day | C9 and C8 (Buildings) | 1,500.00 | 15,000.00 | Till 19.06.2023 |
| NP/04/41/2023/PSSP/W/26 | Construction of Generator Room at DH Kodikamam | 1.52 | 75Day | C9 and C8 (Buildings) | 1,500.00 | 15,500.00 | Till 19.06.2023 |
| NP/04/41/2023/PSSP/W/27 | Renovation of Wash room and Toilet For Ward No.04,BH Tellippalai. | 1.71 | 76Day | C9 and C8 (Buildings) | 1,500.00 | 18,000.00 | Till 19.06.2023 |
| NP/04/41/2023/PSSP/W/28 | Improvement of Ward 7,BH Tellippalai | 1.18 | 72Day | C9 and C8 (Buildings) | 1,500.00 | 12,000.00 | Till 19.06.2023 |
| NP/04/41/2023/PSSP/W/29 | Improvement of Ward 6,BH Tellippalai | 0.17 | 20Day | C9 and C8 (Buildings) | 1,500.00 | 2,000.00 | Till 19.06.2023 |

**"Bidding will be conducted through National Competitive Bidding (NCB). Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii) and its amendments" Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated, 09.10.2020 and 11.01.2021 respectively will also be adopted.**

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Service,**
**Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹைஏஸ் - மோ.சைக்கிள் மோதி இளைஞர்கள் இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

ஹைஏஸ் - மோட்டார் சைக்கிள் மோதி ஏற்பட்ட விபத்தில் இளைஞர்கள் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

ஆவரங்கால் மேற்குப்பகுதியைச் சேர்ந்த கயன்சன் (வயது - 21), நிஷாந்தன் (வயது - 17) ஆகிய இருவருமே காயமடைந்தவராவர்.

இந்த விபத்துச் சம்பவம் அச்சுவேலி நாவற்காடு பகுதியில் நேற்றுமுன் தினம் வியாழக் கிழமை மதியம் இடம்பெற்றது. நாவற்காடுப் பகுதியில் நிறுத்திவைக் கப்பட்ட ஹைஏஸ் வாகனம் பிரதான வீதிக்கு நுழைய முற்பட்டவேளை, யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி வந்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டையிழந்து ஹைஏஸ் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு இளைஞர்கள் பலத்த காயங்களுக்கு உள்ளாகி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த அச்சுவேலி போக்குவரத்துப் பொலிஸார் ஹஏஸ் வாகன சாரதியைக் கைது செய்ததுடன் ஹைஏஸ் வாகனமும் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

(ஒ-14,23)

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 02 . 1967

மறைவு 17 . 03 . 2023



### கனகசபை ஸ்ரீகாந்தன்

சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை ஸ்ரீகாந்தன் அவர்கள் நேற்று (17.03. 2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை மற்றும் வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், சுமதி, ஸ்ரீரங்கன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கண்ணனின் மைத்துனரும், கௌரி சஹானா, சோபிகா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2023) சனிக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 22 65 591
077 37 39 624

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 23926) 1/6

## மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 09 . 1941

இறப்பு 17 . 03 . 2023



### செல்வி சரஸ்வதி (ராணி)

யாழ்ப்பாணம் நீராவியடியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வி சரஸ்வதி (ராணி) நேற்று (17.03.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அவர் நீராவியடி காலஞ்சென்ற கனகரத்தினம் கமலாம்பிகையின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகரத்தினம் தனபாலசிங்கம் (Yarl Metal) அவர்களுடைய அன்பு தங்கையும் தனபாலசிங்கம் நந்தராஜ் (இத்தாலி), தனபாலசிங்கம் துஷ்யந்தராஜ் (U.K) ஆகியோரின் அன்பு மாமியும், ஜெயபாலசிங்கம், பத்மாவதி, புஸ்பவதி ஆகியோரின் அன்பு தமக்கையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.03.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் யாழ்- ஒட்டுமடம் இன்பம் மலர்ச்சாலையில் (Funeral Parlour) நடைபெற்று, யாழ். கோம்பயன்மணல் இந்து மயானத்தில் முற்பகல் 11.00 மணிக்கு தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

நீராவியடி, யாழ்ப்பாணம்.
0773723596
0212223042

தகவல்:
திருமதி புஸ்பவதி கணேசலிங்கம்

(CS 23927) 1-

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தாயின் மடியில் 18 . 01 . 1948

இறைவன் அடியில் 16 . 02 . 2023



கடந்த 16.02.2023 அன்று இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவி

### அமரர் சீவரத்தினம் தெய்வநாயகி

அவர்களது வீட்டுக்கிருத்தியக் நிகழ்வுகள் இன்று (18.03.2023) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது அன்பு அன்னையின் மறைவுச் செய்தி கேட்டு எம்மோடு இணைந்து துயரில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் பதாகைகள், சமூக வலைத்தளம், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

51, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(CS/23923)4,6

குடும்பத்தினர்.
077 780 6166

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 06 . 1952

மறைவு 16 . 03 . 2023



### திருமதி கதிர்காமநாதன் இந்திராதேவி

காங்கேசன்துறை மாங்கொல்லையை பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிர்காமநாதன் இந்திராதேவி (சம்பியன் லேன், சைக்கிள் கடை பாலா அண்ணை அவர்களின் மனைவி) அவர்கள் கடந்த (16.03.2023) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா முத்துப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான இராசையா நகுலாம்பிகை தம்பதியரின் மருமகளும், கதிர்காமநாதனின் அன்பு மனைவியும், அகல்யா (சுவிஸ்), கிருஷ்ணரூபன் (துபாய்), சுகல்யா (கொழும்பு) ஆகியோரின் தாயாரும், கோபாலகுமாரவேல், நிரோஜா, கிரிரதன் ஆகியோரின் மாமியாரும், ஸரோன், சஜின், மிதுன், கிருஷிகன், கருணி, திஷானா, கிதுஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நாகராசா, சிவராசா மற்றும் சிவயோகம், சிவஞானம், அல்லிராணி, சிறிவள்ளிநாயகி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சங்கரப்பிள்ளை மற்றும் விஜயகுலசேகரி, நவரட்ணம், காலஞ்சென்ற தனலட்சுமி மற்றும் தங்கமலர் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.03.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

77/10, தாவடி - சுதுமலை வீதி,
தாவடி.


தகவல்:
குடும்பத்தினர்

(CS 23928) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15 . 12 . 1956



மறைவு
28 . 03 . 2022

## அமரர் S.K.P.தங்கராசா (சோதி)

( ஒய்வு பெற்ற ரெலிகொம் உத்தியோகத்தர் – வவுனியா)

நீங்காத நினைவுகள் தந்து நீண்ட தூரம் சென்று
ஆண்டு ஒன்று கடந்தும் ஓயவில்லை உங்கள் நினைவுகள்
அகலவில்லை உங்கள் அன்பு முகங்கள்
உலகமும் நியம் இல்லை உறவுகளும் நியம் இல்லை
என்று உணர்ந்தோம் உங்கள் இழப்பால்
இறைவனும் இரக்கம் அற்றவன் என்று உணர்ந்தோம்.
உங்கள் இறப்பால் என்ன செய்வது எங்கள் மனம் ஏங்குகிறது.
அழுத விழிகளுக்கு ஆறுதல் காட்ட ஒருமுறையாவது வாருங்கள்
உங்கள் திருமுகங்கள் காண...

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

(AVOCS/00108814,6)

காந்தி வீதி
மகாறம்பைக்குளம், வவுனியா.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி.
0775903879

# மரண அறிவித்தல்



## திருமதி அருந்ததி கணேந்திரராஜன்

(ஓய்வுபெற்ற ஆசிரியை – கொ/இந்துக்கல்லூரி,
கொ/விவேகானந்தா கல்லூரி, வ/ ஓமந்தை மத்திய கல்லூரி)

மணல் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அருந்ததி கணேந்திரராஜன் நேற்று (17.03.2023) வெள்ளிக்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் - கமலாவதி தம்பதிகளின் அன்பு மகளும், கணேந்திரராஜனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மயில்வாகனம் - கனகபூரணம் தம்பதிகளின் மருமகளும், சுஜேந்திரை, யதுர்ஷியா ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற அம்பிகைபாகன் (பொறியியலாளர்) மற்றும் ரவீந்திரன் (ஓய்வுநிலை கிராம அலுவலர்), குலேந்திரன் (ஓய்வுநிலை விவசாய ஆராய்ச்சி உதவியாளர், விவசாயத் திணைக்களம்), ஜெயசீலன் (இத்தாலி) ஆகியோரின் சகோதரியும், சறோஜா (சிங்கப்பூர்), சறோசா, அருந்ததி, மரகதவல்லி ஆகியோரின் மைத்துனியும், கணேஸ், யோகேஸ்வரன், ஞானேந்திரன், கேதீஸ்வரன், அஜித்ராம், பிருந்தா, கிரிஜா, கீர்த்தனா, ஜெயந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இன்று (18.03.2023) சனிக்கிழமை முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (19.03.2023) ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்று பொரளை கனத்தை மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/23923)4,6

தகவல் :- குடும்பத்தினர்.

077 727 6090 (கணேந்திரராஜன்), 077 160 5156 (ரவீந்திரன்),
077 670 1675 (குலேந்திரன்)

# மரண அறிவித்தல்

## திருமதி விஜயரத்தினம் பரமேஸ்வரி

பிறப்பு
21.10.1938

இறப்பு
15.03.2023



(CR/39468)4,6

சரசாலை மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், வெள்ளவத்தையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயரத்தினம் பரமேஸ்வரி கடந்த (15.03.2023) புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - அபிராமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற விஜயரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கிருஷ்ணசாமி மற்றும் தம்பிஜயா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் ரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், யோகேஸ்வரி, யோகரத்தினம், ஸ்ரீஸ்கந்தராஜா, சாந்தமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், தனபாலசிங்கம், சந்தானலக்சுமி, பாமினி, காலஞ்சென்ற குமாரசூரியர் ஆகியோரின் அன்பு மாமியாரும், தனுஜா - அமுதராஜ், காலஞ்சென்ற பிருந்தன் மற்றும் நிலஜா - டிலீப் அமுதன், மதீசன் - சங்கீத்தா, துஷ்யந்தன் - வானதி, சஞ்சிகா - முகுந்தன், ஆரண்யா - மிதுரன், பானுஜா, ஸ்ரீயானி, துசாந்திகா - தனிக்குமார், தக்சன், சஜானி - ஸ்ரீஸ்கந்தராஜா, மீரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அருஷ்னா, அக்ஷயா, அனுஜித், பிரணீத், அதிகன், ரீங்காரா, யௌவனா, அய்னிகா, அதனிசா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (19.03.2023) ஞாயிற்றுக்கிழமை கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் காலை 9 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கிரியைகளைத் தொடர்ந்து பிற்பகல் 2 மணியளவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.51, 7/1, 37 ஆம் ஒழுங்கை,
வெள்ளவத்தை, கொழும்பு–6.

தகவல்:
குடும்பத்தினர்.

பிள்ளைகள்:-
யோகேஸ்வரி (மலர் - யாழ்ப்பாணம்) - [illegible], யோகரத்தினம் (யோகர் - முள்ளியவளை) - 077 2952 775,
ஸ்ரீஸ்கந்தராஜா (சிறி - லண்டன்) - 0044 744 892 7976 , சாந்தமலர் (சாந்தி - லண்டன்) - 0044 736 7886 368

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்வடையும் உயிர் மாய்ப்புக்கள்!

## 4 மணிநேரத்துக்கு ஒரு இறப்பு; ஆண்களின் எண்ணிக்கையே அதிகம்

கொழும்பு, மார்ச் 18

நாட்டில் பொருளாதாரப் பிரச்சினைகள் தலைதூக்கியுள்ள அதேநேரம் உயிர்மாய்ப்புச் சம்பவங்களும் அதிகளவில் பதிவாகி வருகின்றன.

கடந்தவருடம் 3ஆயிரத்து 406 உயிர் மாய்ப்புக்கள் பதிவாகியுள்ளன. ஒவ்வொரு 4 மணிநேரத்துக்கு ஒரு தற்கொலை பதிவாகிறது என மன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதுதொடர்பில் சுகாதார அமைச்சின் மனநலப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் ரொஹான் ரத்நாயக்க தெரிவிக்கையில், கடந்தஆண்டு பதிவான உயிர்மாய்ப்புக்களில் 2 ஆயிரத்து 832 ஆண்களும் 574 பெண்களும் அடங்குவர்.

**பெண்கள் உயிர்மாய்ப்புக்களைவிட ஆண்கள் அதிகளவில் உயிர்மாய்த்துக்கொள்கின்றனர். அவர்கள் தீராத நோய்கள், ஆண்மைக்குறைவு, மனநோய் மற்றும் போதைப்பொருள் பாவனை மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றால் உயிர்மாய்த்துக்கொள்வதை நாடுகின்றனர்.**

பெண்கள் உயிர்மாய்ப்பதைவிட ஆண்கள் அதிகளவில் உயிர்மாய்த்துக்கொள்கின்றனர். அவர்கள் தீராத நோய்கள், ஆண்மைக்குறைவு, மனநோய் மற்றும் போதைப்பொருள் பாவனை மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றால் உயிர்மாய்த்துக்கொள்கின்றனர். கம்பஹா மற்றும் குருநாகல் மாவட்டங்களிலேயே அதிகளவில் உயிர்மாய்ப்புக்கள் பதிவாகியுள்ளன.

இதேவேளை நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியும் உயிர்மாய்ப்புச் சம்பவங்களில் அதிகளவில் தாக்கத்தைச் செலுத்தியுள்ளன.

அதிக வாழ்க்கைச் செலவை எதிர்கொள்வது முதல் குழந்தைகளுக்குக் குறைவாக உணவளிப்பது வரை குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் அதிக பாதிப்பை எதிர்நோக்குகின்றன என ஆய்வில் கூறப்படுகிறது.

அத்துடன், இளையோரும் தங்களின் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாது திணறுகின்றனர் எனத் தெரிய வந்துள்ளது. மனநோயின் தீவிரம் அதிகமாக இருக்கும்பட்சத்தில் சிறந்த உளவியல் மருத்துவர்களையும், நிபுணர்களையும் அணுகுவது சிறந்தது. மனநலம் மேம்படும் பட்சத்தில் உயிர்மாய்ப்புக்களைத் தடுக்க முடியும் - என்றார். (ச-இ)

## பயன்பாடற்ற கட்டடத்தை அகற்றுவதற்குத் தீர்மானம்

சாவகச்சேரி, மார்ச் 18

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட ஏ-9 வீதியுடன் இணைந்த மீசாலை மற்றும் பெரிய அரசடி ஆகிய இடங்களில் பயன்பாடின்றிக் காணப்படுகின்ற வாகனத் தரிப்பிடக் கட்டடங்களை உடனடியாக அகற்றவேண்டும் என்று சாவகச்சேரி நகரசபையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.


சாவகச்சேரி நகரசபையின் விசேட அமர்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தவிசாளர் தலைமையில் இடம்பெற்றபோதே மேற்குறிப்பிட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மீசாலை மற்றும் பெரிய அரசடிப் பகுதியிலுள்ள தரிப்பிடக் கட்டடங்கள் நீண்டகாலத்துக்கு முன்னர் அமைக்கப்பட்டன. ஏ-9 வீதி புனரமைக்கப்பட்ட பின்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் வாகனத் தரிப்பிடங்களுக்கென வேறு இடங்களில் குறியீடுகள் இடப்பட்டன.

எனினும் அந்த இடங்களில் உறவினர் நினைவுக் கட்டடங்கள் அமைக்கப்பட்டதால் முன்னர் காணப்பட்ட தரிப்பிடக் கட்டடங்களை பயணிகள் நீண்டகாலமாகப் பயன்படுத்தவில்லை. இதன் காரணமாக தரிப்பிடக் கட்டடங்களுக்குள் புற்றுகள் வளர்ந்து பாம்புகள் குடிகொண்டுள்ளன.

அத்துடன் நகர அமைப்புக்கும் தேவையற்ற கட்டடமாக அவை காணப்படுவதால் அவற்றை அகற்றவேண்டும் என்று உறுப்பினர்கள் சபையில் கோரிக்கை விடுத்தனர். அதனையடுத்தே வாகனம் மூலம் கட்டடங்களை அகற்ற சபையில் முடிவு செய்யப்பட்டது.

(ஓ-14-9)



## பரீட்சை நடைபெறும்வேளை மின்சார இணைப்புத் துண்டிப்பு

### பெற்றோர் கவலை

சாவகச்சேரி, மார்ச் 18

பாடசாலைகளில் தவணைப் பரீட்சை நடைபெறும் வேளையில் மின்சார இணைப்பைத் துண்டித்துள்ளமையால் மாணவர்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர் எனப் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக வாழ்க்கைச் செலவு உயர்வடைந்துள்ளது. இதனால் பொருளாதாரம் நலிவுற்ற குடும்பங்கள் பல இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றன. அதேநேரம் மின்கட்டண அதிகரிப்புச் செய்யப்பட்டமையால் மின்கட்டண நிலுவை அதிகரித்துள்ளது. இதனால் மின்கட்டணத்தைச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மின்கட்டணம் செலுத்தப்படாமையால் மின்சார சபை மின் இணைப்பைத் துண்டித்துள்ளது.

தற்போது பாடசாலைகளில் தவணைப் பரீட்சை நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் சனிக்கிழமை வரை பரீட்சைகள் நடைபெறவுள்ளன. இந்தவேளையில் மின்இணைப்பு துண்டிப்புச் செய்யப்பட்டுள்ளமையால் மாணவர்கள் பரீட்சைக்கு குப்பி விளக்கின் வெளிச்சத்திலேயே படிக்கும் நிலை உருவாகியுள்ளது என பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர். (ச-9)

## தாய்மார்களுக்கு சத்துணவுப்பொதி

சாவகச்சேரி, மார்ச் 18

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கு சத்துணவுப் பொதிகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வழங்கப்பட்டன.

சாவகச்சேரி நகரசபையால் கடந்த 2022 ஆம் ஆண்டின் உத்தேச வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் கர்ப்பிணித் தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு சத்துணவு வழங்கவென இரண்டு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கான அனுமதி மாகாண ஆளுநரால் வழங்கப்பட்டதையடுத்து நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்களால் கையளிக்கப்பட்டன. (ஓ-14-9)

**நல்லூர் கந்தன் திருமண சேவை**

எம்மிடம் அரச உத்தியோகம் உத்தியோகம் இல்லாதது, உள்நாடு வெளிநாடு டொக்டர், இஞ்சினியர் மணமக்கள் உண்டு. எல்லா இனத்தவர்களும் தொடர்புகொள்ளலாம்.

ஆண்(V) 1993 கேட்டை MSO கி.பா 53 உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. ஆண்(K) 88ல் பிறந்த சொப்ட்வெயார் இஞ்சினியராக பணிபுரியும் (கனடா) மணமகனுக்கு மணமகள் தேவை.

தொர்பு: வி.ஜெயந்தி

T.P: 077 97 33 183

(CS 23933) 1-6

**நீங்கள் விரும்பிய நாடுகளில் உங்களது கல்வியை தொடர எங்களை நாடுங்கள்**

Sweden, France, Switzerland, Finland, Spain, Germany, Hungary, Romania, Latvia, Lithuania, Belarus, Russia ஆகிய நாடுகளுக்கு IELTS தேவையில்லை.

- Business
- Accounting
- MBA
- Engineering
- Nursing and Midwifery
- Tourism
- Information Technology
- Psychological Science

கல்வியுடன் கூடிய வேலை வாய்ப்பு
2023 / 2024 ஆண்டிற்கான பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

STUDY
WORK
MIGRATE

இன்றே விண்ணப்பியுங்கள்

19.03.2023 யாழ் இந்துக் கல்லூரிக்கு (Jaffna Hindu College) நேரில் சமுகமளித்து ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளலாம்.

Trust International Education (PVT) Ltd
Head Office: Sarasi Buildings, No. 197 / B, Colombo Road, Wennappuwa, Sri Lanka.
tieducation8@gmail.com | www.trustied.com | +94 312 256 880
+94 777 192 550 | +94 773 492 550 | +94 742 162 550 | +94 740 042 550

### மனைவிபோல் வெள்ளையாக மாற

## கடனட்டையைத் திருடி கிறீம் கொள்வனவு!

கொழும்பு, மார்ச் 18


பிறிதொருவரின் கடனட்டையை திருடி 20 ஆயிரம் ரூபா பெறுமதியான கிறீமை வாங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கம்பஹா ஜா-எல பகுதியில் இடம்பெற்றுள்ளது. விளையாட்டுக்கழகமொன்றில் பணியாற்றும் 42 வயதான நபரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். "எனது மனைவி வெள்ளையாக இருப்பதால் நானும் வெள்ளையாக வேண்டும் என எண்ணினேன். அதன் காரணமாகவே விளையாட்டுக்கழகத்துக்கு வந்து பரிவர்த்தனை செய்துவிட்டுச் சென்ற ஒருவரின் கடனட்டையை நான் திருடினேன்" என்று சந்தேகநபர் [illegible] பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 31 . 03 . 1948



இறப்பு 16 . 03 . 2023

## கணபதிப்பிள்ளை நவரட்ணம்

புத்தூர் கேணியடி காரைநகரை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கலைப்புலவர் வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நவரட்ணம் (ஓய்வுபெற்ற நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்) அவர்கள் கடந்த (16.03.2023) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தையல்முத்து தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை நாகரத்தினம் தம்பதியரின் மருமகனும், விமலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, இலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற குலராசா, காலஞ்சென்ற ஜெகதீசன் மற்றும் சுந்தரமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.03.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் (புத்தூர் கேணியடி, காரைநகர்) இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கன்று இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

புத்தூர் கேணியடி,
காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்புக்கு : 077 233 6351, 077 361 8568

(CS 23935) 1/6

# மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 02 . 1942



இறப்பு 17 . 03 . 2023

## கதிர்காமு பாலசுப்பிரமணியம்

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு பாலசுப்பிரமணியம் நேற்று (17.03.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் மனோரஞ்சிதம் அவர்களின் அன்புக் கணவரும், கௌரியம்மா, அமரர் கோபாலபிள்ளை, இரத்தினபூபதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மஞ்சுளா (கொழும்பு), கோபி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், முகுந்தன், பாமினி ஆகியோரின் மாமனும், அசீவ்கர் (ஆஸ்திரேலியா), சிவானி, சிவாந்தி, கீர்த்திகன், ஆரணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (19.03.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனத்திற்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

021 224 4327


தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(CS 23934) 1/6

# மரண அறிவித்தல்

## மரியாம்பிள்ளை திருஞானதீபன் (சபா)

### (ஓய்வுநிலை பொலிஸ் சார்ஜண்ட்)



தோற்றம்
07.03.1949

மறைவு
16.03.2023

நாரந்தனை மேற்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், கரம்பன் கிழக்கு ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் வசித்து வந்த வருமான திருவாளர் மரியாம்பிள்ளை திருஞானதீபன் (சபா) (பொலிஸ் சார்ஜண்ட்-ஓய்வு) அவர்கள் கடந்த (16.03.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை பகவதியம்மா தம்பதியரின் அன்பு மகனும், நாரந்தனை வடக்கு அமிர்தநாதர் திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மேரி கிளாராவின் அன்புக் கணவரும், சந்திரசேகரம், ரவீந்திர நாதன், சௌந்தரநாதன் (காந்தி), ஜெயபாலநாதன், தவபாலநாதன் சந்திர வதனி (நந்தினி), மதிவதனி (மாலினி), மதியழகன் (அழகன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காந்திமதி, புஸ்பராணி, சிவசக்தி, பத்மலோஜினி, தர்மபாலன் (உதவிக்கல்விப் பணிப்பாளர்-ஓய்வு), குணசேகரம், வானதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், அன்ரன்குமார், ரஞ்சித்குமார், அருள் ஞானதீபன், ஜெகதீபன், தீபாஞ்சலி ஆகியோரின் அன்புத் தந்தையும், மைதிலி, லிசானா, நிசாந்தினி, செல்வி, அன்ரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக பிரதான வீதியில் உள்ள வைற் ஹவுஸ் அந்தியகால சேவை மண்டபத்தில் 17.03.2023 தொடக்கம் 18.03.2023 சனிக்கிழமை வரை காலை 8.00 மணிதொடக்கம் மாலை 4.30 மணிவரை பார்வையிட முடியும். நாளை (19.03.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அஞ்சலிக்காக ஏழாலை தெற்கு, புளியங்கிணற்றடி இல்லத்தில் வைக்கப்பட்டு, 20.03.2023 திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு ஏழாலை இசுதோர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

077 1979 806 கோ.தர்மபாலன்
077 8240 716 நந்தினி
+1(647) 892-3551 காந்தி

தகவல்:
சகோதரர்கள்.

(CS 23931) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்து வழக்கு: சிறிரங்கா கைது!

வவுனியா, மார்ச் 18

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துத் தொடர்பான வழக்கில், சாட்சியொருவரை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிறிரங்கா நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். வவுனியா மேல் நீதிமன்றம் விடுத்த உத்தரவுக்கு அமைவாகவே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிறிரங்கா பயணித்த கார் கடந்த 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் திகதி விபத்துக்குள்ளானது. விபத்தில் சிறிரங்காவின் மெய்ப்பாதுகாவலர் ஒருவர் காயமடைந்தார். சிறிரங்காவுக்கும் பிறிதொருவருக்கும் இலேசான காயங்கள் ஏற்பட்டன. இந்த விபத்து தொடர்பான வழக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்த வழக்கின் சாட்சியொருவர் சிறிரங்காவால் அச்சுறுத்தப்பட்டார் என்று நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்த நிலையில், சாட்சி அச்சுறுத்தப்பட்டமை, வழக்கு விசாரணைகளுக்காக சிறிரங்கா முன்னிலையாகாமை உள்ளிட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டு சிறிரங்காவை கைதுசெய்யுமாறு வவுனியா மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. இதற்கமைய சிறிரங்கா நேற்று மாலை கைதுசெய்யப்பட்டார். (ம-110)

## நிதியை...

பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

எந்த சட்டரீதியான காரணங்களையும் முன்வைக்காமல் அரசாங்கம் தேர்தலை ஒத்திவைக்க முயல்கின்றது. இந்தத் தருணத்தில் அரசாங்கம் தேர்தலை ஒத்திவைப்பதற்கு தேர்தல் சீர்திருத்தத்தினை ஒரு கருவியாக பயன்படுத்த முயல்கின்றது. தேர்தலை நடத்துவதற்கு நிதியைக் காரணம் காட்டும் அரசாங்கம், சில தரப்புக்கள் ஒன்றிணைந்து முயற்சிகளை மேற்கொண்டு தேர்தலை நடத்தத் தேவையான நிதியைத் திரட்டி வழங்கினால் தேர்தலை நடத்துவதற்குத் தயாரா? - என்றுள்ளது.

தற்போதைய எல்லை நிர்ணய செயற்பாடுகளின் மூலம் உள்ளூராட்சிச் சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்த பின்னர், புதிய தேர்தல் முறை எவ்வாறாக இருக்கும்? எனவும் அவர் அந்தக் கடிதத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். (அ-ம)

## 94 கிராம்...

களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே இந்தப் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. போதைப்பொருளைக் கடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் நபர் தப்பியோடியுள்ள நிலையில், அவர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும் சந்தேகநபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-23)

## போதை...

கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 23 வயதுடையவர் என்றும் அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-ம-125)

## 6 வயதுச்...

சிறுவனுக்கு கடந்த ஆண்டு இறுதியில் குருதிப்புற்றுநோய் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது. சிறுவனை இந்தியாவுக்கு அழைத்துச் சென்று சிகிச்சையளிக்கவுள்ளதாக வீட்டார் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை நிர்வாகத்திடம் தெரிவித்து, விடுதியிலிருந்து சிறுவனை அழைத்துச் சென்றுள்ளனர். அதன் பின்னர் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மத தலம் ஒன்றுக்கு தினமும் அழைத்துச் சென்று பிரார்த்தனை மேற்கொண்டுவந்துள்ளனர்.

சிறுவனின் வயிறு வீங்கி வருவதையடுத்து, சிறுவனுக்கு உணவு வழங்குவதை குறைத்துள்ளனர். இந்த நிலையில் சிறுவன் இரண்டு நாள்களாக மூச்செடுக்க சிரமப்பட்டுள்ளான். இதன் பின்னர் அவன் உயிரிழந்துள்ளான். மத ரீதியான மூடநம்பிக்கையால் சிறுவனுக்கு மருத்துவ சிகிச்சையளிக்கப்படாமையே உயிரிழப்புக்கு காரணம் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது. (அ-ஓ,5,26)

## 12 தமிழக...

அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கடந்த 12ஆம் திகதி மேற்படி மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தொடர்பான வழக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்தது. பருத்தித்துறை நீதிவான் பொன்னுத்துரை கிருஷாந் முன்னிலையில் மீனவர்கள் நேற்றுக்காலை முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன்போதே பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒன்றரை வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். (அ-ம-26,20)

## அரசியல்கைதியொருவர்...

சதீஸ்குமார் நேற்று பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட்டார்.

பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஜனாதிபதியால் அவருக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது. எனினும், அவர் விடுதலை செய்யப்படுவதில் சட்டச்சிக்கல்கள் இருந்தன. செல்லையா சதீஸ்குமார் உச்சநீதிமன்றத்தில் மேற்கொண்டிருந்த மேன்முறையீட்டு மனு நிலுவையில் இருந்ததால் அவர் தனது மனுவை திரும்பப் பெறவேண்டியிருந்தது. இந்த நிலையில் பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி தனது மேன்முறையீட்டை அவர் மீளப் பெற்றுக்கொண்டார். இதையடுத்து அவர் நேற்று விடுவிக்கப்பட்டார்.

சதீஸ்குமார், நெருக்கடிகள் மிகுந்த போர்க் காலங்களில் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அம்புலன்ஸ் ஓட்டுநராக கடமையாற்றி வந்திருந்தார். கடந்த 2008 ஆம் ஆண்டு அவர் கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது அவர் கைதுசெய்யப்பட்டார். விடுதலைப் புலிகள் அமைப்புக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டு அவர்மீது சுமத்தப்பட்டிருந்தது. 2011ஆம் ஆண்டு அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. சிறைத்தண்டனையை எதிர்த்து சதீஸ்குமார் மேன்முறையீடு செய்திருந்தார். மேன்முறையீடு மீதான வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையிலேயே அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். (அ-ம)

## சிமெந்துத்...

உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் எழுத்துமூலக் கோரிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். அந்தக் கோரிக்கைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கிளிநொச்சியின் தொன்மம் மிகு பேரூர்களுள் ஒன்றான வேரவில் கிராமம் 'ஈழவூர்' என சிறப்பித்துச் சொல்லப்படும் அளவுக்கு கிளிநொச்சியின் பண்பாட்டு முக்கியத்துவம் மிக்க அடையாளமாக விளங்குகிறது. கிராஞ்சி கிழக்கு, கிராஞ்சி மேற்கு, மொட்டையன்குளம், பிருந்தாவனம், மதனி குடியிருப்பு, வலைப்பாடு, பொன்னாவெளி, பாலாவி ஆகிய கிராமங்கள் சூழவுள்ள இந்தப் பிரதேசத்தில் ஆயிரத்து 156 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 276க்கும் அதிகமான மக்கள் வாழ்ந்து வருகின்றனர். கடற்புறச்சூழலியல் கொண்ட இந்தப் பிரதேச மக்கள் ஏற்கனவே குடிதண்ணீர் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் நிலையில், தமது பகுதியில் புதிதாக சிமெந்துத் தொழிற்சாலை அமைக்கப்படுமாயின் அது தமது இருப்பைக் கேள்விக்குட்படுத்தக்கூடிய அபாயகரமான சூழலைத் தோற்றுவிக்கும் என்ற இயல்பான அச்சத்துக்கு ஆள்பட்டவர்களாக அதுபற்றிய தெளிவுபடுத்தல்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலையிலுள்ளனர்.

எமது மக்களின் உணர்வுநிலைகளோடு என்றும் ஒருமித்திருக்கும் நிறுவனமான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தன்சார் சமூகத்தின் இருப்புக்காக ஆற்றக்கூடிய சமூகநலன்சார் பணிகளில் ஒன்றாக இதனைக் கருதி, வேரவில் பிரதேசத்தில் சிமெந்து தொழிற்சாலை ஒன்றை அமைப்பதால் எமது மக்களின் இயல்புவாழ்வில் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றிய குடிதண்ணீர் உள்ளிட்ட சூழலியல் இடர்பாடுகள் பற்றிய தெளிவை ஏற்படுத்தவேண்டும். துறைசார் பேராசிரியர்களும் மாணவர்களும் இணைந்து ஒரு முழுமையான ஆய்வை மேற்கொள்வதன் மூலம், அந்தப் பிரதேச மக்களுக்கும் எமது சமூகத்துக்கும் இதன் சாதக, பாதக தன்மைகள் குறித்த தெளிவுபடுத்தலை ஏற்படுத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (அ-ம-113)

## ஆதிசிவன்...

கீரிமலை ஆதிசிவன் ஆலயத்தில் அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், உமாச்சந்திர பிரகாஷ் உள்ளிட்டோர் நேற்றுச் சென்று பார்வையிட்டனர். இதையடுத்து கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்ததாவது:-

ஆதிசிவன் ஆலயம் இருந்த இடம் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. சடையம்மா மடம் இருந்த பகுதியை அடையாளம்காண முடிகிறது. எனினும் சடையம்மா மடம் இருந்ததற்கான அடையாளங்கள் எவையும் இல்லாமல் காணப்படுகிறது. அங்கிருந்த சிவலிங்கம் பெயர்த்து எடுக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணன் ஆலயம் இருந்த பகுதி இடித்து அழிக்கப்பட்டுள்ளது. சடையம்மா மடம் இருந்த இடத்துக்கு அருகே நீச்சல் தடாகம் அமைக்கப்பட்டுள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை ஆதிசிவன் ஆலயம் அமைந்துள்ள பகுதியில் எதிர்வரும் பங்குனி உத்தரத் தினத்தன்று சிவலிங்கமொன்றைப் பிரதிஷ்டை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்குரிய பூர்வாங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என்றார். (அ-ம)

## மயங்கி...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

வல்வை முனியப்பர் கோயிலடிப் பகுதியில் கடந்த 15ஆம் திகதி இந்த விபத்து இடம்பெற்றது. விபத்தில் காயமடைந்த பெண் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். இந்த நிலையில் அவர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். (அ-ம-26)

## மதுவுக்கு...

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவைச் சேர்ந்த மேற்படி நபரின் பிள்ளைகள் கடந்த வருடம் 5ஆம் மாதம் கடலுக்குள் மூழ்கி உயிரிழந்துள்ளனர். அன்றிலிருந்து மன விரக்தியில் இருந்த அவர் குடிபோதைக்கு அடிமையாகியுள்ளார். இதையடுத்து கடந்த மாதம் 12ஆம் திகதி திடீர் சுகவீனமடைந்துள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அவர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். (அ-ம-26)

## பண்ணை...

வள்ளுவர் சிலை அமைக்கப்பட்டு நேற்று மாலை திறந்துவைக்கப்பட்டது.

ரில்கோ சிற்றி ஹொட்டல் நிறுவனத்தினரால் அமைக்கப்பட்ட இந்தச் சுற்றுவட்டத்தின் திருவள்ளுவர் சிலையை சொல்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில், நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். மாநகர சபை முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் சிலர், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையோருக்கு தொழிற்சந்தை



முல்லைத்தீவு மாவட்டத்தில் வேலையற்றிருக்கும் இளைஞர்,யுவதிகளின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு தொழிற்றுறையில் வழிகாட்டிடும் நோக்கில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் தொழிற்சந்தை மாவட்டச்செயலர் க.விமலநாதன் தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல், தொழில் வழிகாட்டல், வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழிகாட்டல், உயர்கல்வி மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி வழிகாட்டல், சுயதொழிலை ஆரம்பித்தல் முதலான பல்வேறு வழிகாட்டல்களை உள்ளடக்கியதாக 500 க்கும் மேற்பட்ட இளையோரின் பங்களிப்புடன் தொழிற்சந்தை முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில் நிர்வாக மேலதிக மாவட்டச்செயலர் க.கனகேஸ்வரன், மேலதிக மாவட்டச்செயலர் எஸ்.குணபாலன், மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் பிரதம கணக்காளர், மாவட்ட பிரதம கணக்காளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்ட பல அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

(ஒ-14-19)

# இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, மோகனதாஸ் சனசமூக நிலையமும் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையும் இணைந்து இலவச மருத்துவ முகாமொன்றை இன்று முன்னெடுக்கவுள்ளன.

மோகனதாஸ் சனசமூக நிலையத்தில் இன்று காலை 8 மணிமுதல் இந்த மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது. இந்த மருத்துவ முகாமில் கண் பரிசோதனை, நீரிழிவுப் பரிசோதனை, குருதி அமுத்தம் என்பன தொடர்பான பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

(ம-131)


## மரண அறிவித்தல்



**திருமதி சின்னத்துரை மகேஸ்வரி**

**(முன்னாள் கீரிமலை பெண்கள் கேணிப் பாதுகாவலர்)**

இன்னாவத்தை கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சின்னத்துரை மகேஸ்வரி அவர்கள் நேற்று (17.03.2023) வெள்ளிக்கிழமை காலை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை (முன்னாள் கீரிமலை ஆண்கள் கேணிப் பாதுகாவலர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னையா சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிர்காமர் இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், சுப்ரமணியம் (மணியம்), காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் செல்வராசா (குஞ்சு), காலஞ்சென்ற கந்தசாமி (குணம்-கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரவீந்திரநாத் (ஓய்வுநிலை வருமான பரிசோதகர் - வலி வடக்குப் பிரதேசசபை), திருமதி கௌரி பாரதிதாசன் (முன்னாள் கீரிமலை பெண்கள் கேணிப் பாதுகாவலர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாரதிதாசன் (வலிவடக்குப் பிரதேச சபை), திருமதி விஜயலட்சுமி (ஓய்வுநிலை நூலகர் - வலி வடக்கு, பிரதே சபை) ஆகியோரின் அன்பு மாமியாரும், அகிலநாத் (தேசிய சேமிப்பு வங்கி - கொழும்பு) பகீரதி (தேசிய சேமிப்பு வங்கி - சுன்னாகம்), நீரஜா (பிரதேச சபை - சுன்னாகம்), மீரஜா( ஆசிரியை - மன்னார் தேவன்பிட்டி மெதடிஸ் பாடசாலை) பிரகலாதன் (காவல்துறை உத்தியோகத்தர் - காங்கேசன்துறை), காத்தியாயினி ஆகியோரின் அன்பு பாட்டியும், தன்ஜாவின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.03.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தொலைபேசி: இல:077 5416 397**
**077 2466 119**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 23998) 1/6

## விற்பனைக்குண்டு

(Bicycle) சைக்கிள் உதிரிப்பாகங்கள் (Parts) மொத்தமாக விற்பனைக்குண்டு. TVS Champ, Power port motor bike என்பன விற்பனைக்குண்டு.

**077 656 6508** (CS/23901)4,6

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்துக்கு முன்பாக 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**076 432 4808**

## வீடு விற்பனைக்கு

நல்லூர் கந்தசாமி கோவிலில் இருந்து 5 நிமிட நடை தூரத்தில் 5 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
**பார்வையிடும் நேரம் :** சனி, ஞாயிறு
முற்பகல் 10.00 - மாலை 6.00 மணிவரை

**074 276 5651**
**WhatsApp :- +1416 893 2377**

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு, ஸ்ரேசன் றோட்டில் உள்ள உடற்பயிற்சி நிலையத்துக்குப் பின்னாலுள்ள 1 1/2 பரப்புள்ள இரு காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு.
(உரிமையாளர்)

**077 020 1366, 076 117 7847, 075 214 4404**

## தொடர்பு கொள்ளவும்

மானிப்பாய், சுன்னாகத்தைச் சேர்ந்த **தம்பிமுத்து நாகரத்தினம்** என்பவரை அவரது நண்பர்கள் **நவம் நவரத்தினம், விசயன் துரைராசா** ஆகியோர் நீண்ட காலமாக நண்பர்களின் தொடர்புகள் இல்லாத காரணத்தினால் தேடுகின்றார்கள்.

**076 963 4997 / 076 673 8031 (உள்ளூர்)**
**+171 856 49924/ +39 328 178 3625**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தாவடியில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு.
K.K.S. வீதியில் இருந்து இரண்டாவது காணி.
தாவடி சந்தியிலிருந்து 100 M தூரத்தில்.

தொடர்பு:- **076 7558 606/076 4365 814**

## துசாக க்ருகயக்ஞ அழைப்பு



கடந்த (06.03.2023) திங்கட்கிழமை தேகவியோகமடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர் ப்ரம்மஸ்ரீ சுப்ரமணியஐயர் மகோதேவசர்மா (மாணிக்கம் ஐயா)**

அவர்களின் உத்தரக்கிரியை நாளை (19.03.2023) ஞாயிறுக்கிழமை நடைபெறும்.

• க்ருகயக்ஞம் - **19.03.2023 ஞாயிற்றுக்கிழமை 11.30 மணிக்கு**

எல்லோரும் இவ்வழைப்பினை ஏற்றுக்கொண்டு ஞாயிற்றுக்கிழமை பகல் நடைபெறும் சமாராதனைய்யிலும் கலந்துகொள்ளும் வண்ணம் வேண்டுகின்றோம்

**V.C லேன், கோப்பாய் தெற்கு.** **குடும்பத்தினர்**
**077 817 7878, 077 700 4522**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.